இருக்குமேயானால் உடனடியாக, நாளையதினமே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 129. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

129—

சமுதாயக்கூடம்

***19210—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, இல்லியம்புதூர் மற்றும் பொத்தியம்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் சமுதாயக்கூடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி இல்லியம்புதூர் மற்றும் பொத்தியம்பாளையம் ஆதி திராவிடர் காலனிகளில் சமுதாயக்கூடங்கள் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி, இல்லியம்புதூரிலே, 100 வீடுகளும், அதன் அருகிலே உள்ள பெரிய இல்லியத்திலே 50 விடுகளும், கொல்லுக்காட்டு என்ற பகுதியிலே 50 வீடுகளும், ஆக, சுற்றிலும் மொத்தம் 200 வீடுகள் இருக்கின்றன. அப்பகுதிகளில் உள்ள அனைவரும், ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்த ஏழையெளியவர்கள். அவர்கள் திருமணம் செய்வது என்று சொன்னால், தனியார் திருமண மண்டபத்தில் செய்வது சிரமமான

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 ஏப்ரல் 21]

விஷயம். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் அந்த அளவுக்கு வளரவில்லை. எனவே, ஆதி திராவிடர் சமுதாய மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு அவசியம் அந்தப் பகுதியிலே ஒரு சமுதாயக் கூடத்தைக் கட்டித் தந்தால், அங்குள்ள ஆதி திராவிட சமுதாயத்தினருக்குப் பயனுள்ளதாக இருக்கும். அதைப்போல, நூலகம் சம்பந்தமாகப் பேசுகிறபோது உள்ளாட்சி அமைப்பின் சார்பிலே ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு நூலகம் என்று அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் சேர்த்ததைப்போல, இந்த அரசு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தைச் செயல்படுத்துகிறபோது, ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு சமுதாயக்கூடம் என்ற அடிப்படையிலே, ஆதி திராவிடர் நலத் துறையும் சேர்ந்து அமைத்தால் நன்றாக இருக்கும். அதுகுறித்து அரசினுடைய திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில், முக்கியத்துவத்தின் அடிப்படையில் சமுதாயக் கூடம் கட்ட இட வசதி, நிதி நிலை வசதி போன்றவை குறித்து ஆய்வு செய்து, முன்னுரிமை அடிப்படையிலே சமுதாயக்கூடம் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கையைத் தற்போது ஏற்க வாய்ப்பில்லை. வருகின்ற நிதியாண்டில் வேண்டுமானால் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நல்ல அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வருகின்ற ஆண்டில் பரிசீலிக்கப்படும் என்று உறுதி அளித்திருக்கிறார். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர் காலனிக்கு நான் செல்கிறபோதெல்லாம் அங்குள்ள மக்கள் தொகுப்பு வீடுகள் மிகுந்த பழுதடைந்து இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்றைக்கு நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, பழுதடைந்து இருக்கிற வீட்டு வசதி வாரிய வீடுகளை வீட்டு வசதித் துறையின் சார்பிலே பழுது நீக்கித் தருகிற திட்டத்தைப்போல, தொகுப்பு வீடுகளை பழுதி நீக்கித் தருவதற்குத் தனி நிதி ஒதுக்கி, பழுது நீக்கித் தந்தால், ஏழையெளிய ஆதி திராவிட மக்கள் பயனடைவார்கள். இப்போதுள்ள தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு

20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் ஆகி இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றன. அவ்வீடுகளை செப்பனிட்டு சரிசெய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளை மராமத்து செய்யும் பணிகள் எல்லாம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக செய்யப்படுகிறது. மிகவும் அத்தியாவசியமான தொகுப்பு வீடுகளை மராமத்து செய்யவேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்துகொள்ளலாம். ஆதி திராவிடர் நலத் துறைமூலமாக இந்த மாதிரி மராமத்து செய்வதற்கென்று தனியாக நிதி எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம். மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

130—

படகு தங்குதளம்

***19470—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தின் மேற்குப் பகுதியில் பக்கிங்காம் கால்வாயை ஆழப்படுத்தி விசைப்படகுகள் தங்குதளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் மேற்குப் பகுதியில் பக்கிங்காம் கால்வாயை ஆசிய வளர்ச்சி வங்கி

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS